திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கறவை மாடுகள் வாங்குவதற்காக 10 மாடுகள் வாங்குவதற்கு ரூ. 30,000 தருவதாகச் சொன்னுர்கள். தனி ஒருவருக்கே அந்தத் தொகை வழங்கப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, யார் பயிற்சி பெறுகிறுர்களோ, அவருக்கு நாம் வழங்குகிறேம். ஆனல், அவர்கள் வாங்கிய கால்நடைகளையும் அவர்களுக்கு இருக்கக்கூடிய நிலம் அல்லது வேறு சொத்துக்கள், அவற்றை ஈடாக வைத்துக்கொண்டு தான் அந்தத் தொகையைத் தருகிறேம்.

வடார்க்காடு மாவட்டத்தில் பால் வழங்கு சங்கங்கள்.

*325 விஞ.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா ?

வடார்க்காடு மாவட்டத்தில் 1973–74-ம் ஆண்டில் துவக்கப்பட்ட கூட்டுறவு பால் வினியோக சங்கங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : 1973–74 ஆம் ஆண்டில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் 12 கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள் தொடங்கப் பட்டன.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, அப்படித் தொடங்கப்பட்ட சங்கங்கள் சரிவர இயங்கவில்லை, லாபகரமாக நடக்கவில்லை என்ற காரணத் தால் அவற்றில் சிலவற்றை எடுத்து ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டு நடத்து கிறுர்கள். அவை பின்னர் லாபகரமாக நடக்கின்றன. எனவே, மறுபடி யும், ஜனநாயக முறைப்படி, அவற்றை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் 204 கோவாப்ரேடிவ் பால் சங்கங்கள் இருக்கின்றன. இவை களில் 113 சங்கங்கள்தான் செயல்பட்டு வருகின்றன. மீதி 91 சங்கங்கள் செயல்படக்கூடிய நிலையில் கிடையாது. காரணம், அச்சங்கங்களின் நிர் வாகம் சரியாக இல்லை. எனவே அவைகளுடைய நிர்வாகக் குழுவைக் கலைத்து தனி அதிகாரிகளை நியமிக்கின்றேம். பின்னர் அந்த நிர்வாகம் சரியாக செயல்பட ஆரம்பித்த பிறகு தனி நிர்வாக அதிகாரிகளை எடுத்து விட்டு மீண்டும் தேர்தல் நடத்தி, முறையாக தலைவரைத் தேர்ந்தெடுத்து நாம் நடத்திக்கொண்டு வருகின்றேம். அந்த வகையில் அப்படிப்பட்ட சங்கங்கள் முன்னேற்றமடைந்திருக்குமாஞல் பழைய முறையில் தொடர்ந்து செயல்படுத்தலாம்.

1975 மார்ச் 14]

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(திரு. பெ. சௌந்தரபாண்டியன், திரு. ஏ. சுப்பிரமணியம், திரு. கோவைசெழியன், டாக்டர் ஹாண்டே ஆகியோர் எழுந்து நின்று "பாயின்ட் ஆப் ஆர்டர்" என்றனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்திற்கு முன்பே திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை கிளப்ப வேண்டுமென்று கூறினார். எனவே, அவர் முதலில் பேசட்டும்.

(2) நடைமுறைக் கேள்விகள்.

(அ) மானியக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட அறிக்கைகள், குறிப்புகள் இவற்றை முன்னதாகவே உறுப்பினர்களுக்கு வழங்குவது குறித்து.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இன்றைக்கு பொதுப் பணித்துறை மானியத்திலே 8 கோரிக்கைகள் மீது விவாதிக்க இருக்கிறோம். இக் கோரிக்கைகள் பற்றிய ஆய்வுரைகள் இன்று காலை தான் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, உறுப்பினர்கள் நேற்று இவைகளைப் பார்ப்பதற்கு வாய்ப்பு இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதேபோல திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை நேற்று இங்கு எழுப்பினார்கள், இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே சம்பந்தப்பட்ட அறிக்கைகளைத் தருகிறோம் என்று அப்போது சொன்னார்கள். அதற்கு மாறாக, இன்று சம்பந்தப்பட்ட அறிக்கைகள் இன்று காலையில் தான் இங்கு வைக்கப்பட்டுள்ளன என்றால் என்ன நியாயம்? எனவே, ஒரு சீரான நடைமுறையை ஏற்படுத்த வேண்டும், அப்போது தான் உறுப்பினர்கள் அவற்றைப் படித்து விவாதிப்பதற்கு நேரமிருக்கும் என்கிற எனது ஒழுங்குப் பிரச்சினையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, எட்டு மானியக் கோரிக்கைகள் வரவிருக்கின்றன. முக்கியமான இந்த மானியங்கள் பற்றிய அறிக்கைகள் எங்களுக்கு நேற்றையதினம் தரப்படவில்லை. இன்று தான் அவை மேஜையின் மீது வைக்கப்பட்டிருக்கின்றன. டீடைல்ட் பட்ஜெட் எஸ்டிமேட் கூட இப்போது தான் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால் நேற்றைய தினம் தான் நமது மாண்புமிகு தலைவரவர்கள் சொன்னார்கள், இனி ஒரு நாளுக்கு முன்னதாகவே தரப்படும் என்று. அப்படிச் சொன்ன உடனேயே, நமக்குக் கிடைத்திருக்கின்ற அனுபவம் என்னவென்றால், முதல் நாள் கொடுக்கப்படாமல் அடுத்த நாள் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், இவைகளை நாங்கள் எப்போது படிப்பது ? எப்படிப் பேசுவது நாங்கள் கண்ணை